# இலங்கையில் மாற்றுக் கருத்துக்களுக்கு எதிரான அடக்குமுறை

## ஜூலை - செப்ரெம்பர் 2015



இலங்கையில் பொறுப்புக்கூறும் பிரச்சனைகளுக்கு சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறையொன்றை அமைப்பதற்கான கையொப்ப இயக்கம் பொலிஸாரின் தொந்தரவிற்கு ஆளானது; மனுவில் ஒரு தமிழ் கத்தோலிக்க அருட்தந்தை கைச்சாத்திடுகின்றார். (ிழவழ புயதநெ ீழயெஅடியடயஅ வறநநவ)


**INFORM** Human Rights Documentation Centre

www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

## உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்

**அ. மனித உரிமைக் காவலருக்கு (ம.உ.கா.) மரண அச்சுறுத்தல்கள்**

**ஆ. கருத்துச் சுதந்திரத்தின் மீறல்கள்**

**இ. ஒன்றுகூடுதலின் சுதந்திரத்தின் மீறல்கள்**

*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990 இன்ஃபோர்ம் INFORM நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது. உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும், அறிக்கைகளை வெளியிடுவதிலும், அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இலங்கையில் கொழும்பை அடிப்படையாகக் கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு, உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும், பிராந்திய (ஆசிய) சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

## சாராம்சம்:

ஒகஸ்ட் 17 அன்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்கள் மற்றும் 2015 செப்ரெம்பர்-ஒக்ரோபரில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது தொடரில் இலங்கை தொடர்பான நிகழ்வுகள் என இரு குறிப்பிடத்தக்க நிகழ்வுகளினால் மூன்று மாத காலம் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

தேர்தல்களில், ஐக்கியத் தேசியக் கட்சி தலைமையிலான முன்னணி அதிகாரத்தைக் கைப்பற்றிய போது, முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவினதும், அவரது சகாக்களினதும் தோல்வி மீள்-தாபிக்கப்பட்டது. இது இனிவரும் வருடங்களில் ஆட்சியின் அதிகளவிலான ஜனநாயக அமைப்புக்கான முன்னேற்றப்பாதையில் ஒரு நிலையாகப் பரந்தளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நான்கு கொலைகளுடன் 146 பாரிய சம்பவங்கள் உட்பட 856 தேர்தல் வன்முறை தொடர்பான சம்பவங்களை INFORM அங்கமாகவும் உள்ள தேர்தல் வன்முறை கண்காணித்தல் நிலையம் (Centre for Monitoring Election Violence - CMEV) அறிக்கையிட்டிருந்தது. 2010இல் நடைபெற்ற தேர்தல்களில், அறிக்கையிடப்பட்ட மொத்த எண்ணிக்கையிலான சம்பவங்களில் 232 பாரிய தேர்தல் வன்முறைச் சம்பவங்களுடன் 414 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பாரிய வன்முறைச் சம்பவங்கள் குறைவடைந்துள்ள போதிலும், அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. முன்னைய ஆட்சியின் கீழ் அரசாங்கத்தின் தணிக்கையுடனும், அனுசரணையுடனும் தேசியவாதியாகவும், இனவாத சித்தாந்தங்களாகவும் பிரசித்தப்படுத்தப்பட்ட யுத்தத்திற்குப் பிந்திய சமூகமொன்றில் இயக்காற்றல்தன்மையுடன் இச் சூழமைவு அங்கீகரிக்கப்படுவது அவசியமாகும். ஆட்சி மாற்றடைந்துள்ளபோதிலும், பெருமளவு அரசியல்வாதிகள் தேசிய அரசாங்கத்துடன் கைகோர்த்துள்ளனர்.

ஜெனீவாவுக்கு கவனம் நகர்ந்தது. இங்கு மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினதும் (OHCHR), இலங்கை மீதான OHCHR விசாரணையினதும் (OISL) அறிக்கை செப்ரெம்பர் 16 அன்று வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை இலங்கையின் புதிய அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில்; 2015 மார்ச்சில் வெளியிடப்படாமல் பின்போடப்பட்டிருந்தது. மோதலுக்கான இரு தரப்புக்களிலான பரந்தரீதியிலானதும், முறையானதுமான துஷ்பிரயோகங்கள் 2015இல் தொடர்கின்ற மீறல்கள், பரந்தரீதியிலான விலக்கீட்டுரிமை ஆகியவற்றை OHCHR மற்றும் OISL அறிக்கைகள் முனைவுபடுத்தியதுடன், 2015இல் திட்டமான மாற்றங்கள் இருந்த போதிலும், இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையானது பொறுப்புக்கூறுதலை உறுதிப்படுத்துவதையிட்டு கையாலாகாததன்மையுடன் விளங்கியதாக வலியுறுத்தியிருந்தது. அவ்வாறாக, சர்வதேச நீதிபதிகள், வழக்குத்தொடுனர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் விசாரணையாளர்கள் ஆகியோருடனான பங்கெடுப்புடன், விசேட கலப்பு விசாரணை மன்றமொன்றை அமைத்தல் பரிந்துரைகளின் மத்தியில் முனைவுபடுத்தப்பட்டிருந்தது. மனித உரிமைகள் சபையினால் ஒருமைப்பாட்டுத் தீர்மானமொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு இலங்கை அரசாங்கம் துணை-அனுசரணையாளராக விளங்கியது. இலங்கையின் புதிய அரசாங்கத்தைச் சாந்தப்படுத்துவதாக தீர்மானத்தின் குரல் தோன்றியதுடன், OHCHR-OISL அறிக்கைகளில் முனைவுபடுத்தப்பட்ட பாரதூரமான சார்த்துரைகளுக்கு அதே வலியுறுத்தலை வழங்கவில்லை. ஆனால், விசேட கலப்பு விசாரணை மன்றமொன்றைத் தாபிப்பதற்கான முக்கியமான OHCHR பரிந்துரை நிச்சயமின்மைக்கு விடப்பட்ட போதிலும், மனித உரிமைகள் பாதுகாப்பினை நோக்கி இலங்கை அரசாங்கத்தினால் சில குறிப்பிடத்தக்க கடப்பாடுகளை தீர்மானம் அடக்கியிருந்தது.

கடந்த காலத்தில் நிலவிய போக்கினைப் போன்று, விசேடமாக நாட்டின் வடக்குப் பகுதியிலிருந்து கருத்துவேறுபாட்டின் அடக்குமுறையின் சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. ஆனால், 2014ஐயும், அதற்கு முந்திய ஆண்டையும் விட, சம்பவங்களின் எண்ணிக்கையும், தீவிரத்தன்மையும் அதிகளவு குறைவாகவே இருந்தது. இதழியலாளர்களினதும், கேலிச்சித்திரக்காரர் பிரகீத் எக்னெலிகொடவினதும் காணாமல்போகச்செய்தல் தொடர்பில் பெருமளவு இராணுவ ஆளணியினர் கைது செய்யப்பட்டமை உட்பட சில குறிப்பிடத்தக்க மிக முக்கியமான முன்னேற்றங்களையும், கைதுகளையும் காலம் கண்டது. எனினும், கடந்த சில வருடங்களில், கருத்து வேறுபாட்டின் அடக்குமுறையின் பெருமளவு சமபவங்களையிட்டு விசாரணைகளிலும், வழக்குத்தொடுப்பதிலும் மற்றும் தண்டனை வழங்குவதிலும் முன்னேற்றம் இருக்கவில்லை.

## அ. மனித உரிமைக் காவலருக்கு (ம.உ.கா.) மரண அச்சுறுத்தல்கள்

### 1. தமிழ்ப் பெண் ம.உ. காவலர் மரணத்துடனும், பாலியல்வல்லுறவுடனும் அச்சுறுத்தல்




*தவபாலன் பிரியதர்ஷினி*

ஓகஸ்ட் 11 அன்று, மன்னார் மாவட்டத்தில் உள்ள மாந்தை மேற்குப் பிரிவில் இலுப்பைக்கடவைக்கு அருகில் அமைந்துள்ள கிராமமொன்றான தீர்த்தவாடியில் பெண்கள் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவியான 47 வயதான தவபாலன் பிரியதர்ஷினியின் வீட்டிற்குள் பிரவேசித்த அடையாளம் தெரியாத ஆண்களின் குழுவொன்று கிராமவாசிகளுக்கு அவர் சமூகத் தலைமைத்துவம் வழங்குவதைத் தொடர்ந்தால் ~பாலியல்வல்லுறவும், கொலையும்| செய்யப்படுவார் என அவரை எச்சரிக்கை செய்துள்ளது.
http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37886

## ஆ. கருத்துச் சுதந்திரத்தின் மீறல்கள்

### 2. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் (இ.அ.ச.) தலைவர் மீது தாக்குதல்

இ.ஆ.சங்கத்தின் தலைவர் 2015 செப்ரெம்பர் 30 அன்று அனுராதபுரம் பிராந்தியக் கல்வி அலுவலகத்திற்கு கூட்டமொன்றுக்காகச் சென்ற போது, அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவரினால் தாக்கப்பட்டதாக இ.ஆ.ச. அறிக்கையிட்டிருந்தது. கல்வி நிருவாகச் சேவையில் நியமனங்களை முறைமைப்படுத்துவதற்காக அவர் ஆதரித்துபேசுவதன் காரணமாக இது நடந்துள்ளது என இ.ஆ.ச. நம்புகின்றது.

(2015 செப்ரெம்பர் 30 அன்று வட மத்திய மாகாண சபையின் செயலாளருக்கான இ.ஆ.ச.இன் கடிதம் மீதான அடிப்படை)

### 3. இதழியலாளர்கள் தாக்கப்பட்டனர்

பொதுக் கூட்டமொன்றில் காட்சிப்படுத்தப்பட்ட திரிபுபடுத்தப்பட்ட தேசிய கொடிகளின் புகைப்படங்களை எடுத்துக்கொண்டிருந்த புகைப்பட இதழியலாளர்கள் தாக்கப்பட்டு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாவலர்களினால் காவலில் வைக்கப்பட்டனர். பாதுகாவலர்களினால் இதழியலாளர்களின் புகைப்படக் கருவிகளும் எடுத்துச்செல்லப்பட்டன. ஒழுங்கமைப்பாளர்களினால் கொடிகள் அகற்றப்பட்ட பின்னர் மட்டுமே இதழியலாளர்களும், அவர்களது புகைப்படக் கருவிகளும் விடுவிக்கப்பட்டன. இச் சம்பவம் 2015 ஜூலை 27 அன்று நடைபெற்றது.
http://www.lankadeepa.lk/index.php/top_story/335695

## இ. ஒன்றுகூடுதலின் சுதந்திரத்தின் மீறல்கள்

### 4. திருகோணமலையில் கையொப்ப இயக்கங்களை இலங்கைப் பொலிசார் நிறுத்தினர்



*பயமுறுத்தல்கள் இருந்தபோதிலும், கையொப்;ப இயக்கங்கள் தொடர்ந்தன (Tamil Guardian photo)*

2015 செப்ரெம்பர் 7 அன்று இலங்கையின் ஆயுத பாணியிலான இனத்துவ மோதலின் இறுதிக் கட்டங்களின் போது இழைக்கப்பட்ட மாபெரும் அராஜகங்களைக் கையாள்வதற்காகச் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்றுக்கு அழைப்புவிடுத்த கையொப்ப இயக்கமொன்றின் ஒழுங்கமைப்பாளர்களை திருகோணமலையில் உள்ள இலங்கைப் பொலிசார் அழைத்தனர். திருகோணமலையில் அவர்கள் பலாத்காரமாகக் கையொப்பங்களைப் பெறுகின்றனர் என்பது மீதான அறிக்கைகள் குறித்து பொலிஸ் தலைமைப்பீட இன்ஸ்பெக்டரைச் சந்திக்குமாறு பொலிசாரினால் இயக்கத்தின் ஒழுங்கமைப்பாளர்கள் கேட்கப்பட்டனர். இலங்கையின் பொலிஸ் ஊடக அலகினால் போராட்டங்கள் படமாக்கப்பட்டதாகவும், இது ஒருவராலும் கையொப்பங்கள் பலாத்காரமாகப் பெறப்படவில்லை என்பதை நிரூபிப்பதாகவும் இலங்கை தேசிய மக்கள் முன்னணியின் தலைவரால் 'ட்விட்' செய்யப்பட்டிருந்தது.
http://www.tamilguardian.com/article.asp?articleid=15831

## 5. கையொப்ப இயக்கத்தை நிறுத்த யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைப் பொலிஸ் முயற்சி

ஆயிரக்கணக்கான தமிழ் குடிசார் மக்கள் கொல்லப்பட்டதாக சார்த்துரைக்கப்பட்ட இலங்கையின் ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களின் போது இழைக்கப்பட்ட மாபெரும் அராஜகங்களையிட்டு ஆராய்வதற்கு சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்றைக் கோரி இலங்கையில் செப்ரெம்பர் 5 அன்று நடத்தப்பட்ட கையொப்ப இயக்கமொன்றை நிறுத்துவதற்கு இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் முயன்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. கையொப்பங்கள் திரட்டப்பட்டிருந்த வேளையில் நல்லூர் பொலிஸ் உத்தியோகத்தர் அங்கு வந்து, “அதை நிறுத்துமாறு கட்டளையிட்டனர்” என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ‘ட்விட்’ செய்யப்பட்டிருந்திருந்தார்.
http://www.tamilguardian.com/article.asp?articleid=15804




*‘ட்விட்’ அமைப்பு - யாழ்ப்பாணத்தில் கையொப்ப இயக்கம் மீது ஜி.பொன்னம்பலம்*